Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

16 NOV 1971
GRADUATE LIBRARY

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 276

யாழ்ப்பாணம் ஐப்பசி 30 றமழான் 27 செவ்வாய்க்கிழமை (16-11-71)

நவநாகரீக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன் 444
தந்தி இரத்தினம்ஸ்
50. கன்னதிட்டி. யாழ்ப்பாணம்.

# "அரசைப் பலவீனப்படுத்த எதிரிகள் முயல்கிருர்கள்"

## ஆட்சிமன்றத்தில் சுபசிங்கா குற்றச்சாட்டு

கொழும்பு, திங்கள் அரசாங்கத்தை எதிர்ப்பவர்களும் சமூக எதிரிகளும் கூட்டணி அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதற்கு முயற்சிசெய்கிருர்கள் என்று விஞ்ஞான, கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா இன்று ஆட்சிமன்றத்தில் குற்றஞ்சாட்டினர்.

நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா தயாரித்துள்ள கூட்டணி அரசின் இரண்டாவது வரவுசெலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கு முழு அரசாங்கமுமே பொறுப்பு. இந்த யோசனைகள் கடந்த நான்கு மாதங்களாகவே ஆலோசிக்கப்பட்டு வந்தன. இவைகளைப் பற்றி தப்பான கருத்துக்களைக் கிளப்பி நிதி அமைச்சருக்கு இக்கட்டை ஏற்படுத்துவதுடன் அரசாங்கத்தையும் பலவீனப்படுத்துவதற்கு சிலர் முயற்சி எடுப்பது எனக்குத் தெரியும் என்று திரு. சுபசிங்கா கூறினர்.

கூட்டணி அரசின் 2-வது வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் இன்று காலையில் மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஆரம்பமாயிற்று. விவாதத்தை எதிர்க்கட்சியினர் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆரம்பித்து வைத்தார். அரசாங்கதரப்பில் முதல் பேச்சாளராக விஞ்ஞான, கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா கலந்துகொண்டார்.

திரு சுபசிங்கா தொடர்ந்து பேசுகையில், மக்கள் அரசாங்கம் முன்னை அரசாங்கத்தைவிட நாட்டு நிலைமையை உணர்ந்து ஆட்சி

(5-ம் பக்கம் பார்க்க)

## நாட்டில் பெரிய மாற்றம் தேவை

### வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் ஜே. ஆர்.

கொழும்பு. திங்கள் "நாடு இன்றிருக்கும் கஷ்ட நிலையிலிருந்து விடுபட வேண்டுமானல், நாட்டின் சகலதுறைகளிலும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். இதற்காக நாட்டு மக்கள் கட்சி வேறுபாடுகளோ கொள்கைவேறுபாடுகளோ பாராட்டாது ஒற்றுமைப்பட்டு உழைக்கவேண்டும்."

இவ்வாறு இன்று வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய எதிர்க்கட்சித்தலைவர் திரு ஜே ஆர் ஜெயவர்த்தன கூறினர்.

திரு ஜே. ஆர். தொடர்ந்து பேசுகையில், நாட்டின் பொருளாதாரம் இன்று நலியுற்றநிலையில் இருக்கிறது. அதைச் சீர்படுத்துவதற்கு பெரியதொரு மாற்றம் தேவை. இதைச்செய்ய பரீட்சார்த்தமான பொருளாதாரத் திட்டங்கள் உதவாது. எமது நாடு எப்பொழுது சிறந்த பொருளாதார நிலையை அடையும் என்று எதிர்பார்க்கின்றேன். எமது நாடு வெளிநாட்டுச் செலாவணியில் கிட்டத்தட்ட 50 சதத்திற்கு மேற்

(5-ம் பக்கம் பார்க்க)

## வி. என். எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை

கொழும்பு, திங்கள் வரவு-செலவுத் திட்ட ஆலோசனை இரண்டில் திருத்தம் செய்யப்பட்டிருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இவைபற்றி சபைக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று ஆட்சிமன்றத்தில் வரவு-செலவுத்திட்ட விவாதம் தொடங்கியபோது ஒழுங்குப்பிரச்னை ஒன்றை சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி என் நவரத்தினம் கிளப்பினர். இந்நேரத்தில் நிதி அமைச்சர் சபையில் இருக்கவில்லை. சபைமுதல்வர் திரு மைத்திரிபாலசேனநாயக்கா பதிலளிக்கையில் பத்திரிகையில் வெளிவந்த செய்தி சரிதான் என்று கூற, டட்லியும் நவமும் மற்றவர்களும் சபைக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்காமல் பத்திரிகைச் செய்திகளை ஏற்கச் சொல்வது தவறு என்று சுட்டிக்காட்டினர்.

இதன் பின் டாக்டர் என் எம் பெரேரா சபைக்கு வந்தார். அமைச்சரவை செய்த முடிவை தான் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்து தமது விவாதம் தொடர்ந்தது

## மரவரியை இரு மடங்காக்கலாம்

### ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் எம். சி சமர்ப்பிப்பார்

யாழ்ப்பாணம், செவ். "யாழ்ப்பாணக் குடாநாட்டின் மரவரிமுறையைத் தொடர்ந்து நீடிப்பதால் அரசாங்கத்திற்கு ஏற்படும் நஷ்டத்தை சரிக்கட்ட பல வழிகள் உண்டு. முக்கியம்சமாக ஒருமரத்திற்கு 10 ரூபா வீதம் இப்பொழுது வரி அறவிடப்படுகிறது. அதை இருமடங்காக்குவதன் மூலம், எவ்வளவோ வருமானத்தை அரசாங்கம் பெறலாம்".

கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கப் பொதுநிர்வாக சபைக் கூட்டத்தில், நியமன எம். பியும், கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசியுமான திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

சங்கத்தலைவர் திரு. கே. ஐ. பூவிலிங்கம் தலைமையில் நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எம். சி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

மரவரி முறையில் மாற்றம் செய்து, வரியை இரட்டிப்பாக உயர்த்தலாம்.

(5-ம் பக்கம் பார்க்க)

## இரு பிள்ளைகளைக் காணவில்லை.

### குருநகரில் பரபரப்பு

யாழ்ப்பாணம், செவ். குருநகர் பகுதியில் நேற்று முன்தினம் இரு பிள்ளைகள் திடீரெனக்காணுமல் போனதைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதுபற்றி குருநகர் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் அறிவித்துள்ளனர்.

அந்தோனிப்பிள்ளை சேவியர் என்பவரின் பிள்ளைகளான பாபு (12 வயது) நிர்மலா (10 வயது) ஆகிய இருவரும் மாலை 6 மணிவரை வீட்டில் இருந்தார்களென்றும் அவர்களின் தாயார் அண்மையிலுள்ள செபஸ்தியார் கோவிலுக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பியபோது பிள்ளைகளைக் காணவில்லையென்றும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது. அந்நேரம் பிள்ளைகளின் தகப்பனர் வீட்டிற்கு முன்னுள்ள கடையிலிருந்தாராம்.

பாபு சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்திலும் நிர்மலா யாழ் கன்னியர்மடப் பாடசாலையிலும் கல்வி பயில்பவர்கள். இரவுமுழுதும் பிள்ளைகளைத் தேடிய பின்னர் நேற்றுக்காலை பெற்றோர் பொலிசாரின் உதவியை நாடியுள்ளனர்.

## பட்ஜட் யோசனை வெளியானதெப்படி?

### விசாரணைக்குழு வேண்டும் என்கிருர் உடுவில் எம் பி

கொழும்பு. திங்கள் நிதி அமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா வரவு-செலவுத்திட்டத்தை ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னரேயே அதில் கூறப்பட்ட சில ஆலோசனைகள் வெளிவந்துள்ளன. இதுபற்றி ஆட்சிமன்றத் தெரிவுக் குழுவையோ அல்லது வேறு குழுவையோ அமைத்து ஆராய அரசாங்கம் முன்வர வேண்டும்.

இவ்வாறு இன்று வரவு-செலவுத்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய உடுவில் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி தர்மலிங்கம் கூறினர்.

திரு தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில் வெளிநாட்டுச் செலாவணி கஷ்டம் இருப்பதாக இங்கு பலரும் கூறுகின்றனர். எம் நாட்டிலுள்ள பலருக்கு வெளிநாட்டு வங்கிகளில் கணக்கிருப்பது யாரும் அறிந்தரகசியம். சுவிஸ் வங்கியில் கூட பலர் பணம் போட்டு

(5-ம் பக்கம் பார்க்க)

மோட்டார் வாகனங்களின் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜெர்மனியில் தயாரிக்கப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
3709

உழுந்தும் வடுப்பு வியாபாரத்தில் அதிக இலாபம் அடைய குறைந்த கூலியில் உழுந்து உடைத்துக் கொடுக்கப்படும். நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். முகாமையாளர் இரண்டி மில்ஸ், 443, கே.கே.எஸ்.ரோட், யாழ்ப்பாணம்.
3675

சகலவித நவதானியங்களும், கோழித்தீனி வகைகளும் மருந்துச்சரக்குவகைகளும், வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மனோன்மணி மில்ஸ், 46/1 பிரவுண் ரோட், யாழ்ப்பாணம்.
3694

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சக்தி பூஜா அகர் பத்திகள் ஈழநாட்டில் ஈடு இணையற்ற சிறந்த நீண்டநேரம் எரியும் தெய்வீக நறுமணம் கொண்ட பத்திகள். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி மருந்துக்கடை, கொழும்பு, யாழ்ப்பாணம்.
3708

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியில் 6 3/4 பரப்புக்காணியும், விசாலமான வீடும் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் முழுக்காணியையும் வீட்டையும் அல்லது பேரப்பையும் வீட்டையும் வாங்கலாம். முழுவிபரங்களுக்கு: பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். க. நாகலிங்கம், 292/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
3741

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

மணி மார்க் சுத்தமான வரகு அரிசி நீரழிவு நிவாரணத்திற்கு டாக்டர்களின் சிபாரிசு செய்யப்பட்டு எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் பெற்றது. P. முத்தையா, வசந்தா இன்டஸ்றீஸ், நாவலடி லேன், யாழ்ப்பாணம்.
3706

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம் விடோ தியேட்டரடியில் சின்னராசாவின் பிறப்புச் சாட்சிப் பத்திரமும் வேறு தஸ்தாவேஜுகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. சின்னராசா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
3744

## புங்குடுதீவு ஆட்சேபம்

வேரதீவு, திங்கள்

இருபிரிவுகளாகப் பிரிக்கப்படவிருக்கும் தீவுப்பகுதிக் காரியாதிகாரி பிரிவின் மறு கந்தோர் வேலணையில் நிறுவப்படவிருப்பதாகப் பேசப்பட்டுவருகிறது. இதுசம்பந்தமாக தனது எதிர்ப்பை உள்ளூராட்சி உள்நாட்டு வெளிநிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவிடம் புங்குடுதீவு கிராமசபை தந்தி மூலம் தெரிவித்துள்ளது.



சண்முகம் குகவதனி, அராலி.

முதலாவது பிறந்த தினத்தை (இன்று) 16-11-71-ல் விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
3144

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செவ்

இன்று மாலை வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் மெய்கண்டார் கழகத்தாரால் நடாத்தப்பெற்று வரும் "சிவஞானபோதம்" என்னும் பொருள் பற்றி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி சொற்பொழிவாற்றுவார்.

0 0 0

யாழ்ப்பாணம், செவ்

இன்று மாலை இராமநாதன் இசைக் கல்லூரியில் பேராசிரியர் தஞ்சாவூர் ரி எம் தியாகராஜன் 'இசைப் பயிற்சி விளக்கம்' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

## 125 சயிக்கிள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாணத்தில் கடந்த சில மாதங்களாக 125 சயிக்கிள்கள் களவுபோயிருக்கின்றன. இவைகளை யாழ்ப்பாணம் பொலிஸ் கண்டுபிடித்திருப்பதுடன் 15சைக்கிள் திருடர்களையும் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளது. (கு.வி.ம)

## கேள்வி விளம்பரம்

நெடுந்தீவு கிராமசபை அக்கிராசனரால் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரையும் கீழ்வரும் வேலைகட்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

விபரம்

I. கிராமிய மகளிர் இணைந்த வீதி 1-ம் வட்டாரம
II வண்ணாங்கழி வீதி 5-ம் வட்டாரம்.
III. திறந்த வெளி அரங்கு 5-ம் வட்டாரம்

கிராமசபைக் கந்தோரில் 29-11-71 நண்பகல் 12-00 மணி வரையும் ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 50/- பிணையாகவும் ரூபா 15/- இரயமாகவும் செலுத்தி கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களின் நகல் பிரதிகள் 30-11-71 10 மணிக்கு அப்பகுதிநிறைவேற்றுப்பொறியியலாளருக்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் கிடைக்கப்பட வேண்டும். ஏனைய விபரங்கள் கிராமசபை அலுவலகத்திலறிந்து கொள்ளலாம்

(ஒப்பம்) அ. து. அம்பலம்
அக்கிராசனர், கி. ச.
கிராமசபை,
நெடுந்தீவு.
15-11-71
3143

## வானொலிக் கல்வி

கொழும்பு, திங்கள்

அடுத்த ஆண்டு முதற் கொண்டு வானொலி மூலம் பாடசாலை பாடங்களும் போதிக்கப்படும். ஆறும் வகுப்பிலிருந்து 9ம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் மாணவர்கள் இத்திட்டத்தால் பயன் அடைவார்கள்.

ஆரம்பத்தில், சிங்களம் அல்லது தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் வானொலி மூலம் படிப்பிக்கப்படும் என்று தெரிகின்றது.

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 10-00
எம்.ஜி.ஆர். — ஜெயலலிதா நடித்த
# தாய்க்குத் தலைமகன்

தினசரி 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
# என்தம்பி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, பத்மினி, பானுமதி, வைஜயந்திமாலா, நம்பியார் நடித்த
# ராஜபக்தி
[புதியகொப்பி]

50வது தினம் — கடைசி வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார்ஜானகி - ரவிச்சந்திரன்
(இரு வேடங்களில்)
நடித்த
# காவியத்தலைவி

5-வது வெற்றிவாரம்
லிடோ [யாழ்நகர்]
காலை 10-30 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
# ஆராதனா
(சங்கீதமயமான சித்திரம்)
ராஜேஷ்கன்னா ★ ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார் ★ பரீடா ஜலால்
நடித்தது.

3-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்



★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ நாகேஷ்
★ அசோகன்
★ ஷீலா
[நடித்தது]

# மூன்றெழுத்து
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி சினிமா
(சங்கானை)
மாலை, 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30மற்றினி
ராஜன்-ஜெயலலிதா
நடித்த
ஏன்?

வெலிசினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
ஆனந்தன் — ஹேமமாலா
விஜயபுரி வீரன்
(புதிய கொப்பி)

நாகமஹால் சினிமா
கல்லுண்
தினசரி 4-30
LOVE PARADE
வயது வந்தவர்கள் மட்டும்
தினசரி, 6-30, 9-45
ஆனந்தன்-K.R. விஜயா
நடித்த
கல்யாண மண்டபம்

REGAL Jaffna
Daily 5-15 7 15 p.m.
Sat-Sundays 10-30 a.m,
Sorphia Loren
in
YESTERDAY. TO DAY & TOMORROW
(adults [only)
(Cinemas cope - Color)

தினசரி பி. ப. 2-30, 10-00
ஆனந்தன்-அசோகன்
குமாரி சச்சு
நடித்த
வீரத்திருமகன்
(புதிய கொப்பி)

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily: 10-30 a.m, 4-45pm
ALL NEAT IN BLACK STOCKINGS
(Color)
இரவு 6-30, 10-00
கேசற சிங்கயோ
(KESARA SINHAYO)
[சிங்களப் படம்]

## நன்றி நவிலல்

யாழ். வில்லூன்றி தேவஸ்தான தர்மகர்த்தாவும், முன்னைநாள் உபமேயரும், மாநகரசபை அங்கத்தவரும், பிரபல சமய சமூக சேவகருமான 'சித்தாந்த வித்தகர்' சோமசுந்தரம் இராசரெத்தினமவர்கள் 10-11-71 நள்ளிரவு சிவபதமெய்தினர் ஈமச்சடங்குகள் 11-11-71 மாலை வில்லூன்றி மயானத்தில் நடைபெற்றது. ஈமச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும் சிறப்புடன் நடைபெற உதவியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் அன்னாரது குடும்பத்தினர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

தகவல்: இ. குமரவடிவேல் [மகன்], வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
3141

தற்பொழுது அச்சில்...!
'ஈழநாடு'
# தினக்குறிப்பு 1972
50 பக்கங்கள் கொண்ட
முக்கிய தகவல்களுடன் விரைவில்
வெளிவருகின்றது.
விலை ரூபா 1 சதம் 75

# இந்தியாவில் அவசரகால பிரகடனம்?

## எல்லை நெருக்கடி பற்றி இந்திரா ஆலோசனை

புதுடில்லி, நவ 1

எல்லைப்பகுதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து தமது அமைச்சரவையுடன் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆராய்ந்தார்.

வெளிநாட்டுத் தலைவர்களுடன் தாம் நடாத்திய பேச்சுவார்த்தைகள் குறித்தும் அதன் பலாபலன்களையும் அவர் எடுத்து விளக்கினார்.

அடுத்த வாரத்தில் இந்தியாவில் அவசரகால நிலைமை பிரகடனம் செய்வது குறித்தும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### பீரங்கித் தாக்குதல்

இந்தியாவின் எல்லைப்பகுதிக்கு மறுபக்கத்திலிருந்து பீரங்கித் தாக்குதல் நடாத்தப்படுவதாக செய்திகள் கூறுகின்றன. ஆயினும் மேற்குப் பகுதியில் நிலைமை சாமூகமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

எல்லைப்பகுதியிலுள்ள கிராமத்தினர்களில் நெல் சாகுபடி செய்தவர்கள் தமது அறுவடையை இப்போது செய்து கொண்டிருக்கிறார்கள்.

கிராமக் கடைத்தெருக்களில் மக்கள் கூட்டமாகக் காணப்பட்டனர்.

### அஞ்சலில்லை

ஆட்சேதமும் பொருட்சேதமும் தாக்குதல்களால் தமக்கு நேர்ந்த போதிலும் தாங்கள் அஞ்சவில்லையென்று அந்தப்பகுதிக் கிராமவாசிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் துருப்புகள் தம்மை நோக்கிச் சுடுவதாகவும் இதனுல் மலர் செத்து மடிந்து போவதாகவும் ஆயினும் குண்டுகளைக் கண்டு தாம் மிரளப்போவதில்லையென்றும் அவர்கள் சொன்னதாகத் தெரிவிக்கப்பட்டது.

### பாக். விமானங்கள்

ஜம்மு காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் விமானங்கள் அத்துமீறிப் பறந்ததாகவும் இந்த விமானங்களை இந்தியப்படையினர் விரட்டியதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

### இந்திரா பேச்சு

சோஷலிஸ நாடுகளுடனான உறவுகளைப் பலப்படுத்துவதன்மூலமும் அந்த நாடுகளின் பிணைப்புகளை விரிவாக்கிக் கொள்வதாலும் நாட்டின் நிலைமையை மேலும் பாதுகாத்துக் கொள்ள முடியுமென்று பிரதமர் இந்திரா காந்தி தெரிவித்திருக்கிறார்.

"நேருவும், சோஷலிஸ நாடுகளும்" என்ற தலைப்பில் நேற்று நேருவின் 82-வது பிறந்ததினத்தை யொட்டி நடந்த கருத்தரங்கில் பேசுகையிலேயே இவ்வாறு சொன்னார்.

ரஷ்யப் புரட்சி உலகத்துக்கு அளித்த புதியதொரு சித்தனையையும் அதன் விளைவுகளையும் இந்திரா எடுத்துச் சொன்னார்.

### அரசு நன்கொடை

காரதீவு, திங்கள்

சரவணை மாதர் சங்கத்துக்கு இருபதினுயிரம் ரூபாவைக் கடனாகவும் பத்தாயிரம் ரூபாய் நன்கொடையாகவும் அரசாங்கம் வழங்கியுள்ளது. சங்க அபிவிருத்தி வேலைகளுக்கென வழங்கப்பட்ட இப்பணம் நாரந்தனை கிராம அபிவிருத்திச்சபையின்மூலம் வழங்கப்பட்டது. இந்நிதி சிறுகைத்தொழில் அபிவிருத்திக்கு உபயோகிக்கப்படவுள்ளது.

### இன்று பட்டமளிப்பு

யாழ்ப்பாணம் செல்வச் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆதீனத்தின் சைவசித்தாந்தப் பயிற்சி நெறி முதலாவது ஆண்டுப் பூர்த்திவிழாவும் மெய்கண்டதேவர் விழாவும் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

இவ்விழாவில் சைவசித்தாந்தப் பயிற்சி நெறியின் முதலாண்டுத்தினைப் பூர்த்தி செய்தவர்களுக்கு "சைவசித்தாந்த நன்மறிஞர்" பட்டம் அளிக்கப்படுகிறது. யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. த. முருகேசம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மேற்படி பட்டத்தை வழங்குவார்.

### உபதபால் நிலையம் நிறுவவும்

காரதீவு, திங்கள்

வேலணை தெற்குக் கடற்கரைப் பகுதியில் உபதபால் நிலையம் ஒன்று உடனடியாக அமைத்து உதவுமாறு தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம், வடபாக தபால் தந்தி அத்தியட்சகர் திரு வ நடராசாவை தந்தி மூலம் கேட்டுள்ளார்.

### காரை. தெற்கு கி. ச. வேண்டுகோள்

காரதீவு, திங்கள்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்குமாறு காரைநகர் தெற்கு கிராமசபை, சுகாதார அமைச்சர் திரு. டபிள்யூ. டி ஜே ஆரியதாசவைக் கேட்டுள்ளது.

## 'கி. வங்க பிரச்னைக்கு அரசியல் தீர்வு தேவை!'

மாஸ்கோ நவ 15

"முஜிபுர் ரகுமான் விசாரணையின் அரசியல் நோக்கம் தெட்டத் தெளிவானதாகும். கிழக்குப் பாகிஸ்தானின் பிரபல தலைவரின் விசாரணை நடத்தப்படுவது பாகிஸ்தான் ராணுவம் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள்மீது கட்டவிழ்த்துள்ள பிரமாண்டமான அடக்குமுறைகளுக்கான பொறுப்பை முஜிபுர் ரகுமான்மீது அவாமி லீக் மீதும் சுமத்துவதற்காகவே" இவ்வாறு கண்டித்துள்ளார் சோவியத் விமர்சகர் அலக்ஸாந்தர் உலைன்ஸ்கி.

கிழக்குப் பாகிஸ்தானில் 'முற்போக்கு அரசியல் பொது பிரமுகர்கள் தொடர்ந்து வேட்டையாடப்படுவது' கண்டு சோவியத் மக்கள் ஆழ்ந்த கவலையுற்றுள்ளனர் என்று கட்டுரையாசிரியர் வலியுறுத்துகிறார்.

அவாமி லீக்கின் அரசியல் திட்டம்பற்றி பிரஸ்தாபித்துவிட்டு அவர் பின்வருமாறு கூறுகிறார். 'கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் தேசிய உரிமைகளுக்கான போராட்டம் ஜனநாயகத்துக்கும் சமூக அரசியல் மாற்றங்களுக்கும் பாகிஸ்தான் மக்கள் நடாத்தும் போராட்டத்தின் ஆக்கபூர்வமான அம்சம் என்பது தெளிவு.'

கிழக்குப் பாகிஸ்தான் நிலைமை சகஜமாகிவிட்டதென்றும் அகதிகள் சுலபமாகத் திரும்பலாம் என்றும் கூறுவது வீண் பித்தலாட்டம் என்பதை ஒரு சில ஆயிரம் பேர்கள் திரும்பியிருப்பதிலிருந்து புரியலாம் என்று அவர் கூறுகிறார்.

பிரமாண்டமான அளவில் அகதிகள் இந்தியாவுக்குள் பிரவேசிப்பது இந்தியா மீது பெரும் சுமையாகவுள்ளது என்று அவர் கூறுகிறார்.

பொருளாதாரப்பிரச்னை தீர ...

## 'நாடு சிறுகைத்தொழில் மயமாக வேண்டும்'

காரதீவு, திங்கள்

"நாட்டிலே புரையோடிப் போய்விட்ட பொருளாதாரப்பிரச்னை தீரவேண்டுமானுல் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் சிறுகைத்தொழில் அறிமுகப்படுத்தப்பட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் உழைக்க வழிவகுக்கப்படவேண்டும். எவ்வளவு தூரத்துக்கு சிறுகைத்தொழில்கள் நாட்டில் பெருகுகின்றதோ அவ்வளவுக்குப் பொருளாதார நிலையும் உயரும். வேலையில்லாப் பிரச்னையும் தீரும்."

காரைநகர் - விளானில் அமைக்கப்பட்ட புதிய நெசவு நிலையத் திறப்புவிழாவிற்குத் தலைமைவகித்து உரையாற்றிய தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பொ. நடராசா மேற்கண்டவாறு தெரிவித்தார். தீவுப்பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். மாரிமுத்துவும் உரையாற்றினார். இந்நிலையத்தில் பயிற்சிபெறும் மாணவிகளுக்கு பயிற்சிக்காலம் முடியும்வரை நாளொன்றுக்கு ஒரு ரூபாய் ஐம்பது சதம் வழங்கப்படுமென்றும் காரியாதிகாரி இக்கூட்டத்தில் அறிவித்தார்.

## 'அதிகாரமும்பதவி மோகமும் அழிவையேதரும்'

முன்னுள் உப சபாநாயகர்

உடுப்பிட்டி, திங்கள்

"அதிகாரத்தால் ஒருபோதும் பொதுமக்களை ஒடுக்கமுடியாது. அதிகாரத்தை வகுத்து ஆட்சியைக் கைப்பற்றுபவர்கள் பொதுமக்களே. ஆட்சி அதிகாரமும் பதவி மோகமும் இறுதியில் அழிவையே தேடிக் கொடுக்கும். உலக வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது ஹிட்லர், நெப்போலியன் போன்ற மாபெரும் வீரர்களின் இறுதி முடிவைக்கண்டு பரிதாபப்படவேண்டியுள்ளது"

மேற்கண்டவாறு முன்னுள் உப சபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சமூகக் கல்வியல் மன்றக் கூட்டத்தில் 'அகிலாளப் பிரச்னை' என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. மு சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினர் புறக்கணிப்பதால் ஜனநாயகத்தின் அஸ்திவாரமே சரிந்துவிடக்கூடும். கிழக்கு வங்கப் பிரச்னை இதற்கோர் உதாரணம். வங்க மக்கள் ஜனநாயக உரிமைகளைக்காக்கவே உயிர்த்தியாகம் செய்துவருகிறார்கள்'

வங்க மக்கள் நாட்டைப் பிரிக்குமாறு கோரவில்லை.

4-ம் பக்கம் பார்க்க)

## நியமனப்பத்திரங்களை சீனக்குழு சமர்ப்பித்தது!

நியூயார்க், நவ. 15

ஐ. நா.வில் அங்கம் வகிக்கவிருக்கும் சீனாவின் உத்தியோகபூர்வமான குழு ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்டிடம் தங்கள் நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்தனர்.

ஆஸ்பத்திரியில் தற்போது சிகிச்சை பெற்றுவரும் யுதாண்டிடம் இவர்கள் தங்கள் நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்தனர்.

ஐ. நா.வில் இன்று சீனு முறைப்படி பதவியேற்கிறது. இன்று பதவியேற்பு வைபவத்தின்போது சீனுவை வரவேற்றுப் பல நாடுகளும் உரையாற்றும்.

## நெப்போலியன் கடிதம் உக்ரேனில் கண்டுபிடிப்பு

மாஸ்கோ, நவ.15

நெப்போலியன் சக்கரவர்த்தியின் கைமொப்பமிட்ட கடிதமொன்று உக்ரேய்ன் குடியரசின் கரகோவ் சர்வகலாசாலையில் கண்டெடுக்கப்பட்டது. பிரெஞ்சுப் புரட்சிக்காலத்தைச் சேர்ந்த தஸ்தாவேஜுகளுக்கிடையில் இது இருந்தது.

1815-ம் ஆண்டு மே மாதம் 11ந்திகதியில் லிரெஸ்டனிலிருந்து போலிஸ் பகுதி அமைச்சர் ஜோஸப் ஃபெளஷேக்கு இக்கடிதம் எழுதப்பட்டதாகும். பொன்னுல் ஓரங்கள் பூசப்பட்ட தடித்த கடதாசியில் தனி எழுது கொண்டு பொறிக்கப்பட்ட இக்கடிதம் கையால் எழுதப்பட்டதாகும்.

இதில் பாவிக்கப்பட்ட மை இன்று கருமையான மண் நிறத்தில் உள்ளது.

பிரெஞ்சுத் துருப்புகள் ஸக்ஸனி மாப்பிள்ளைகளை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும்போது றுட்ஸன் போருக்கு மூன்று வாரங்களுக்குப் பின்னர் எழுதப்பட்டதாகும்.

பிரஷியா அரசாங்கத்தின் தலைவர் பதவியை ஏற்கும்படி ஃபெளஸேவிடம் கடிதம் கோருகிறது. இது சாத்தியமாகவில்லை. ஏனென்றும் பிரஷியா கைப்பற்றப்படவில்லை.

1805ம் ஆண்டில் கரகோவ் சர்வகலாசாலை திரட்ட ஆரம்பித்த இத்தஸ்தாவேஜுகளில் இது எப்படிப் புகுந்துகொண்டதென்பது இன்னும் சரியாக நிரூபிக்கப்படவில்லை.

## மெரினர்-9 அனுப்பிய செவ்வாய் படங்கள்!

### வெறுமையாக உள்ளன

ஹூஸ்டன் நவ 15

செவ்வாய்க் கிரகத்தை இப்போது வலம் வந்து கொண்டிருக்கும் "மெரினர்-9" ஆளில்லாத விண்வெளிக்கலம் நேற்று படங்களை அனுப்பியுள்ளது.

குறுகிய கோணக் காமிராவினுல் பிடித்து அனுப்பப்பட்ட இந்தப் படங்கள் வெறுமையாகவே இருந்ததாக ஹூஸ்டன் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அறிவித்தது. இதனுல் செவ்வாயின் உண்மைத் தன்மைகளை அறியமுடியாது ஹூஸ்டன் நிலையத்தினர் சிரமத்துக்குள்ளானுர்கள்.

ஆறுமாதங்களுக்கு முன்பதாக இந்த விண்வெளிக்கலம் செவ்வாயை நோக்கி அனுப்பப்பட்டது.

சூரியமண்டலத்திலுள்ள இன்னுமொரு கிரகத்தைச் சுற்றி செயற்கைக் கிரகம் ஒன்று வலம்வர ஆரம்பித்திருப்பது இதுவே முதற்தடவையாகும்.

# கடைகள் பெறுவதற்கு 950 விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம் செவ்வாய்

யாழ்ப்பாணம் நவீன மார்க்கெட்டில் கடைகள் பெறுவதற்காக நேற்றுவரை சுமார் 950 பேர் விண்ணப்பித்துள்ளனர். நேற்றுத்தான் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதிநாளாகும். நேற்று நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர்.

நவீன மார்க்கெட் திறப்பு விழா ஜனவரி முதல்வாரத்தில் நடைபெறுமென்றும் பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா திறந்து வைப்பாரென்றும் மேயர் அல்பிரட் துரையப்பா தெரிவித்துள்ளார். நவீன மார்க்கெட் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றது.

# லொறி மோதி இருவர் பலி

இரத்தினபுரி, திங்கள்

இரத்தினபுரி பாதையில் ஓடிக்கொண்டிருந்த பாரி லொறியொன்று திடீரென பாதையைவிட்டு இறங்கி அருகில் நின்ற பலரை மோதித்தள்ளியதுடன்கடை யொன்றின்மீதும் மோதியது. இதனால் இருவர்படுகாயங்களுடன் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்குமரணமானதுடன், வேறு மூவர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

லொறி உடைந்துநொருங்கியதால் அதனுள்ளிருந்தவர்கள் அவ்வளவும் வீதியில் ஆருகப்பெருக்கெடுத்து ஓடியது.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானவரின் பெயர் சயிமன் அல்லது சுதா என்பதாகும். சம்பவம் நடந்த இடத்தில்மரணமானவர்பற்றிய விபரம் ஒன்றும் தெரியவில்லை. லொறியின் சாரதிக்குஎதுவித காயமும் ஏற்படவில்லை. அவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# மயிலிட்டியில் இந்திய மீனவர்

மாவிட்டபுரம், திங்கள்

மீன்பிடிப் பதற்காக ஆழ்கடலுக்கு வந்தஇந்திய மீனவர்கள் மூன்றுபேர் மயிலிட்டியில் கரைசேர்ந்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து மீன்பிடிப்பதற்காக ஆழ்கடலுக்கு சென்ற இந்த மூன்று மீனவர்கள் திசைமாறி காற்றுடன் அள்ளுப்பட்டு மயிலிட்டிக்கரையில் ஒதுங்கியுள்ளனர் பிரஸ்தாப நபர்கள் குறித்து காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர்

பிரஸ்தாப மூன்று நபர்களும் காங்கேசன்துறைப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர் இவர்கள் வந்தவள்ளம் காங்கேசன்துறை சுங்கப்பகுதியின் பாதுகாப்பில் உள்ளது

......

## நாட்டில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்ட தொகையை இறக்குமதிக்குச் செலவிடுகிறது. கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் 2 கோடி 60 லட்சம் ரூபாவிற்கு உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டது. இவ்விதம் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு இறக்குமதிக்கு சிறிது காலத்துக்குமுன் தடைவிதிக்கப்பட்டது. இதனால் மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்தார்கள் அன்றாட அவசியமான பாவனைப்பொருட்களை இங்கு உற்பத்தி செய்வதற்கு இத்தொகையை செலவிடலாம்

### மூலதனம் அவசியம்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மூலதனம் அவசியம் தனியார் சேமிப்பும் அவசியம். இதற்கு வாய்ப்பளிக்கப்படவேண்டும் இன்று நாடிருக்கும் நிலை மக்களின் நம்பிக்கையைச் சிதறடிப்பதாகவிருக்கிறது இருப்பினும், மக்கள் நம்பிக்கையை இழந்துவிடாது நாணயமாகவும், கட்டுப்பாடாகவும் செயல்படவேண்டும் என்றார்.

## அரசைப்...

(1- ம் பக்கத்தொடர்ச்சி)

குத்திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது. நாட்டு மக்களின் எதிர்கால சுபீட்சத்தைக் கருதி இச்செயல்களை அரசு செய்துவருகிறது.

### அபிவிருத்தி வங்கி

அரசாங்கம் கைத்தொழில் அபிவிருத்தி வங்கி ஒன்றைத் திறக்கவிருக்கிறது. இந்தப் புதிய வங்கி, சிறு கைத்தொழில் அபிவிருத்திக்கு நிதிஉதவி வழங்கும் என்றார்

ஆட்சிமன்றம் இன்று கூடிய பொழுது, சபைமுதல்வரும், நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சருமான திரு. மைத்திரிபால சேனநாயக்கா, மாவு, சீனி ஆகியவற்றின் விலைக்குறைப்புப்பற்றியும் ஒருவருக்கு ஒருமாதத்திற்கு சீனி 3 றூத்தலாகக் கூட்டப்பட்டது பற்றியும் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்

## அ. சியல்குரோதம் வளர்ச்சிக்குத் தடை

வேலணை, திங்கள்

''கிராம முன்னேற்றச் சங்கம் கிராம வளர்ச்சியையே இலட்சியமாகக் கொண்டு இயங்கவேண்டும். சங்க உறுப்பினர்களிடையே அரசியல் காரணமாகக் குரோதங்கள் நிலவுமானால் அது சங்கத்தின் வளர்ச்சியைப் பாதிப்பதுடன் நாட்டில் செய்யக்கூடிய முற்போக்கான அபிவிருத்தி வேலைகள் நாமதித்து மக்களுக்குக் கிட்டக்கூடிய நற்பயன் அற்றுப்போவதற்கு இடமுண்டு'' என்று வேலணை மேற்கு கிராம முன்னேற்றச் சங்கப் பொதுக்கூட்டத்தில் தலைமையுரையாற்றிய தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. பொ: நடராசா கூறினார் வேலணை மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

கோட்டை, ஞாயிறு

தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் மிகப்பெரிய மீன் காட்சிச்சாலை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது மிகவும் அழகான முறையில் கட்டப்பட்டு வருகிறது.

## மரவரியை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கலால் பகுதியினரால்தான் ஊழல்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வூழல்களை ஒழிப்பதன் மூலம் அரசாங்கம் வருமானத்தை அதிகம் ஈட்டலாம். அரசாங்கம், கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் உதவியை நாடினால், நாம் நல்ல ஆலோசனைகளை கூறுவோம். இந்த ஊழல்களை நிவர்த்தி செய்து மரவரி முறையை நீடிக்கலாம். இழக்கு மாகாணத்தில் வரீட்சார்த்தமாக கூட்டுறவு முறையை அமுலுக்குக் கொண்டுவந்து, அதில் அரசாங்கமும் தொழிலாளரும் நன்மை பெற்றும் வடசத்தில் காலப்போக்கில் மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கலாம்.

இதுவரைகாலமும் மரவரி முறையினால் பெரும்பான்மைத் தமிழ்மக்கள் அடைந்த முன்னேற்றம் அளப்பரியது. ஆதலால் மரிவரியை தொடர்ந்து நீடிக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.''

''மரவரி தொடர்ந்து நீடிக்கக் கோரும் தீர்மானம் ஒன்றை ஆட்சிமன்றக்குழுக் கூட்டத்திலேதான் சமர்ப்பிக்கப்போவதாகவும், அதனால், அரசாங்கத்துக்கு ஏற்படும் நஷ்டத்தை சரிக்கட்ட என்ன நடவடிக்கைகள்மேற்கொள்ளலாம் என்ற ஆலோசனைகள் கூறப்போவதாகவும் எம்.பி. குறிப்பிட்டார்.

ஆரியகுளம் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வடபகுதியிலிருந்து அதிகமான அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர்.

வரும் தைமாதம், யாழ். மாநகரசபை மண்டபத்தில் மகாநாடு நடத்துவதென்றும், ஆட்சி மன்ற அங்கத்தவர்களையும், முக்கியமாக நிதி மந்திரி திரு. என் எம். பெரேராவையும் அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. வடபகுதியின் பல இடங்களிலும் மரவரியை தொடர்ந்து நீடிக்கக் கோரி பொதுக் கூட்டங்கள் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது

பலாலியில்

# இரத்தினக்கல் கடத்தல் முயற்சி

## முயன்றவருக்கு அபராதம்

மாவிட்டபுரம், திங்கள்

கைக்கடிகாரப் பட்டிகளை மலாயாவில் இருந்து கடத்திவந்த நபர் சுங்கப்பகுதியினரிடம் வசமாக மாட்டிக்கொண்டார் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

விமானமார்க்கமாகநேற்று மலாயாவில் இருந்து பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த நபர் ஒருவரிடம் இருந்தபொருட்களை சுங்கப் பகுதியினர் சோதனையிட்ட சமயம் அவரின் சூட்கேசில் இருந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரப்பட்டிகள் கைப்பற்றப்பட்டன

இதுகுறித்து விசாரணை செய்த யாழ் சுங்க அதிகாரி பிரஸ்தாபநபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் பொருளையும் பறிமுதல் செய்தார்

நேற்றுமுன்தினம்இந்தியாவுக்கு செல்வதற்காகபலாலி விமான நிலையத்தை வந்தடைந்த ஒரு நபரின் வசம் இருந்த இரத்தினக்கல் கைப்பற்றப்பட்டது 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ் இரத்தினக்கல் பறிமுதல் செய்யப்பட்டதுடன் பிரஸ்தாப நபருக்கு 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

......

## பட்ஜட்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறார்கள் ஒரிக்கரைப் பத்திரிகை முதலாளி வெளிநாட்டு வங்கியில் பணம் போட்டிருக்கிறார் என்பதை அரசாங்கம் நியமித்த விசாரணைக்குழு தெரிவித்துள்ளது இந்தப்பணங்களை இங்கு கொண்டுவர இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது

நில உச்சவரம்பு சொத்து உச்சவரம்பு ஆகிய வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டயோசனைகளும் வரவேற்க வேண்டியவை இவற்றை புதிய அரசியல் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசியல் நிர்ணயசபையில் திருத்தம் கொண்டுவந்தது தமிழரசுக் கட்சி மட்டும் தான் என்றார்

அளவெட்டி, நவ. 15

போஷிதனம், விரக்தி, புத்துணர்வுக்கான வழிவகைகள் வேண்டும் என்பவை ஆகியவையே மாணவர் குழப்பத்துக்குக் காரணமாகும்.

இப்பகுதியிலுள்ள சுன்னாகம் ஹரிஸ்பொண்ட் கல்லூரியில் வர்த்தகப் பிரிவுகளுக்கான கட்டடம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. வி. தர்மலிங்கம் கூறினார்.



மணிவாக்கு

தோல்விக்குச் சமாதானம் சொல்லி அதைச் சரியான செயல் என்று சொல்வது மிகவும் கேவலமாகும். இது தோல்வியைக் காட்டிலும் பெரிய குற்றமாகும்.

—ஜவஹர்லால் நேரு

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஐப்பசி மாதம் 30-ந் திகதி (16-11-71)

# வரவு - செலவுத்திட்டம் (4)

1972-ம் ஆண்டு ஜனவரி முதல் புதிதாக நியமிக்கப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு இலவச பென்ஷன் திட்டம் இராது. மற்றெல்லா சிப்பந்திகளையும்போல் அவர்களுக்கு பிராவிடென்ட் நிதியோ அல்லது பணம் செலுத்திய பென்ஷன் முறையோதான் இருக்கும் என்று நிதி அமைச்சர் அறிவித்துள்ள யோசனையை யாரும் ஆட்சேபிக்க முடியாது. இதற்கு மாறாக பழைய பென்ஷன் முறை கைவிடப்படுவது பலவிதங்களிலும் வரவேற்கத் தக்கதாகும்.

அந்நியர்கள் ஆட்சி செய்த காலத்தில் தங்களுக்கு ஆதரவாளர்கள் வேண்டுமென்று அரசாங்க அதிகாரிகளுக்குவிசேஷ சலுகைகளை அளித்தார்கள். அதில் பென்ஷன் முறையும் ஒன்று. அந்நிய ஆட்சியாளர் வெளியேறிய பின் நிலைமை பெரிதும் மாறிவிட்டது. பள்ளிக்கூடங்களை தேசியமயமாக்கிவிட்டதால் ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்களாகி, பென்ஷன் செலவுகள் பெரிதும் அதிகரித்துவிட்டன. மூன்று லட்சம் பேர் இலவச பென்ஷன் பெற உரிமை பெற்றுள்ளனர். அவர்களைப்போலவே கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றில் வேலைபார்க்கும் சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேர் தங்களுக்கும் இலவச பென்ஷன் வசதி வேண்டுமென்று கேட்கின்றார்களாம்!

இலங்கை போன்ற ஒரு நாட்டில், இவ்விதம் பென்ஷன் செலவுகளை அதிகரித்துப் போவது முடியாதென்று கண்டே தாம் புதிய அதிகாரிகளுக்கு இலவசபென்ஷன் முறையை நீக்கி பணம் செலுத்தும் பென்ஷன் திட்டத்தைக் கொண்டுவர வேண்டியதாயிற்று என்று விளக்குகின்றார் நிதி அமைச்சர். ஏற்கெனவே வேலையிலுள்ளவர்களை இது பாதிக்காதபடியால் இதை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை.

இதேசமயம் இன்று அரசாங்க உத்தியோகத்தில் மக்களுக்கு அதிக மோகம் இருப்பதற்கு முக்கிய காரணம் இலவச பென்ஷன் முறைதான். இந்த முறையை மாற்றினால், நம் படித்தவாலிபர்கள் வேறு தொழில்களில் தங்கள் கவனத்தைத் திருப்பக்கூடும். மேலும் சமதர்மம் பேசப்படும் இக்காலத்தில் ஊதியம் பென்ஷன் திட்டம் முதலியவற்றில் வேற்றுமைகளும் பாரபட்சங்களும் காட்டுவது சகிக்கப்படமாட்டாது. ஆகவே இலவச பென்ஷன் முறையை நிதி அமைச்சர் மாற்ற முன்வந்தது பல விதங்களிலும் வரவேற்கத்தக்கது. இந்த நடவடிக்கையை நாடு விடுதலை அடைந்ததுமே கொண்டுவந்திருக்க வேண்டும்.

## இளைப்பாறிய ஆசிரியர்கள்

சம்பளம் காரணமாக திடீரென இளைப்பாற நேரிட்ட ஐயாயிரம் பள்ளிக்கூட ஆசிரியர்கள் தங்களுக்குச் சேரவேண்டிய பென்சன் மாதக்கணக்கில் சேராமல் கஷ்டப்படுகிறார்களாம். வடஇலங்கை இளைப்பாறு அரசினர் ஆசிரியர் சங்கத்தார் இதைத்தெரிவித்து, கல்வி அமைச்சு இதை கவனித்து உடன்நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

இந்தத் தவக்கத்துக்கு காரணம், திடீரென ஐயாயிரம் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றதால் அவர்களது கணக்குகளைப் பார்த்து, பென்ஷன் தொகையை நிர்ணயிக்க போதிய ஊழியர்கள் இல்லாததுதான் என்று சமாதானம் கூறப்படுகிறதாம். ஊழியர்களின் பற்றாக்குறைக்காக, பல்லாண்டுகள் உழைத்த எளிய ஆசிரியர்களை சங்கடத்துக்குள்ளாக்குவது எவ்விதத்திலும் நியாயமல்ல. மேலும் ஐம்பத்தைந்து வயதில், அவர்களது குடும்பப்பொறுப்புகள் அதிகமாகஇருக்கும். திடீரென வேலையையும் வருமானத்தையும் இழந்த அவர்கள், வாழ்க்கைச் செலவுகள் மிக உயர்ந்துள்ள இச்சமயத்தில், எப்படிச் சமாளிக்கமுடியும்!

இடைக்காலத்தில் ஒரு சிறுதொகை அவர்களுக்குக் கிடைத்துவருமாறு செய்யப்பட்டுள்ளதுமெய்தான். இரண்டொரு மாத தவக்கமென்றால் ஒருவிதமாகச் சமாளிக்கலாம். ஆனால் மாதக் கணக்கிலே பென்ஷன் கிடைக்காததுடன், இனி எப்போது கிடைக்குமென்று திட்டமாகத் தெரியாத நிலையில், அவர்கள் எவ்வளவுசிரமப்படுவரென்பதை யாரும் சுலபமாக ஊகிக்கலாம். கல்வி அமைச்சில் போதிய ஊழியர்களைத் தற்காலிகமாகவாவது நியமித்து சம்பந்தப்பட்டவர்களின் பென்ஷன் கணக்குகளைப் பார்க்கச் செய்யவேண்டியது அரசாங்கத்தின் அவசர கடமையாகும்.

## இடம் மாறுது

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி தச்சன் தோப்பு ஆலய வளவில் அமைந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை இடமாற்றம் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பொது மக்கள் ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து கைவிடப் பட்டுள்ளதாகவும் பிரஸ்தாப கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து அவ்விடத்திலேயே இயங்குமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்துப் பண்பாடுகளை அறிய!

"மேலான இந்துப் பண்பாடுகளை அறிந்து அவற்றைச் சுவரப் பின்பற்ற வேண்டுமென்ற நோக்கத்துடனேயே பத்தாயிரம் மைல் தூரத்திலிருந்து இங்கு வந்திருக்கிறோம். இங்குள்ளவர்களுக்குச் சமயபோதனை செய்ய அல்ல."

என்றிவ்வாறு அமெரிக்காவிலிருந்து அளவெட்டியிலுள்ள தமது ஆசிரமத்துக்கு அமெரிக்க சீடர்களுடன் வந்துள்ள மாஸ்டர் சுப்பிரமணிய சுவாமி அவர்கள், நேற்று முன்தினம் பக்தர்கள் கூட்டத்தில் தெரிவித்தார். யோகர் சுவாமிகளின் சீடரான அவர், தமது குருவின் சட்டைமீது அளவெட்டியில் மூன்று அடுக்கு வீட்டை இந்த ஆசிரமத்துக்காகக் கட்டப்போவதாகவும் இதற்கான 'பிளான்' எல்லாம் தயாராகிவிட்டதாகவும் தெரிவித்தார்.

நெற்றியில் திருநீறு. வெள்ளை ஜிப்பாவுக்கு மேலே பெரிய ருத்திராட்ச மாலை. புன்முறுவல் பூத்த கம்பீரமான முகம். இடுப்பில் வேட்டி. பொன் போன்ற மேனி. இந்தச் சிவப்பொலிவுடனே அவர் பத்மாசனத்தில் அமர்ந்து தந்த கம்பீரமான காட்சி கண்டோர் மனதைக் கவர்வதாக இருந்தது.

பின்புறமாக ஒரு சிறிய மேடையில் பிள்ளையார் விக்கிரகமும், யோகசுவாமிகள் நிஷ்டையிலுள்ள படமும் காட்சியளித்தன. சுவரில் ஏதோ புதுவிதமான சித்திர எழுத்துக்கள் அடங்கிய படம் தொங்கவிடப் பட்டிருந்தது. என்ன என்று கேட்டதில் முருகன் அரு

### ஐயரன் எழுதுவது

ளால் தாம் கண்டுபிடித்துள்ள ஒரு புது மொழி என்றும், தியான அனுபவங்களை அதன் மூலம் சுலபமாகத் தெரிவிக்கலாமென்றும், இம்மொழி அமெரிக்காவில் பரவிவருவதாகவும் சொன்னார். கூட்ட ஆரம்பத்தில் அவரது சிஷ்யர்கள் அந்தப் புது மொழியில் சேர்ந்து பஜனை செய்தார்கள்.

பிரதர் மார்க், பிரதர் ராமர் என்ற இளம் அமெரிக்க சீடர்களுக்கு அன்று அவர் தீட்சை அளித்தார். இரு சீடர்களும் காவி கட்டி குருமுன்பாகப் பணிந்திருக்க குரு திருநீற்றைப் பன்முறை அவர்கள்மீது போட்டு சீடரின் தலையில் தம் இரு கைகளையும் வைத்துச் செவியில் உபதேசம் செய்தார். அவர்களது நெற்றியிலே திருநீறு பூசி, அபய அஸ்தம் காட்டிப் புன்முறுவல் பூத்தார். சீடர்கள் இருவரின் முகத்திலும் எவ்வளவு சாந்தி!

நம்மிடம் ஏதோ சைவப் பண்பாட்டைத் தெரிந்துபோக வந்திருப்பதாகத் தெரிவித்தார் சுவாமி. ஆனால் அவரிடமும், சீடர்களிடமும் இருந்துதான் மேலான சைவப் பண்பாட்டை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்போலிருந்தது. நம்மில் எவ்வளவு பேர் ருத்திராட்சமாலை அணிகிறோம். சிவதீட்சை எடுக்கிறோம்! நமது பண்பாட்டை நினைவுபடுத்தி, நமக்கெல்லாம் வழிகாட்டுவதுபோல் இருந்தது அந்தக் காட்சி.

இந்துக்களை மதம் மாற்ற முன்னர் பலர் அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து இங்கு வந்தனர். ஆனால் இப்போது நிலைமை முற்றிலும் மாறியுள்ளதுபோல் தோன்றுகிறது. யோக சுவாமி அவர்களின் அருள் ஆசி பெற்று, அமெரிக்காவில் பல இடங்களில் ஆசிரமத்தை அமைத்தும் ஹவாய் தீவிலே தியானக் கல்லூரி ஒரு பல்கலைக்கழகத்தை அமைத்தும் மேலைநாட்டினருக்கு ஆத்மீகப் பணி செய்கின்றார் மாஸ்டர் அவர்கள்!

இளம் சீடரான மார்க், கூட்டம் நடக்கையிலேயே ஒரு புதுவித கமிராவுடன் படம் பிடித்துக்கொண்டிருந்தார். கூட்டமுடிவில், டெலிவிஷன்போல், எல்லாக் காட்சிகளும் அப்படியே காட்டப்பெற்றன.

சமயப் போட்டாபோட்டிகள் காலம் முடிந்துவிட்டது. இது ஆத்மீகத்தின் மூலம் மனித சமூகத்தை ஒற்றுமைப்படுத்த வேண்டிய காலம். அது நெருங்கி வருகிறதென்பதை அன்று கண்டேன்.

0 0 0

சிவதொண்டு செய்வார்
நிநெறிச் செல்வார்
சிவதொண்டு செய்வார்
புலனைந்தும் வெல்வார்
சிவதொண்டு செய்வார்
பிறன்பொருள் வெஃகார்
சிவதொண்டு செய்வார்
சிவமேயாவர்.

—யோக சுவாமிகள்

இலங்கை எழுத்தாளன்

# "எண்ணப்படி நூல்களை வெளியிட முடியாத நிலை"

யாழ்ப்பாணம், செவ்.

எழுத்தாளன் தனது எண்ணப்படி நூல்களை வெளியிட முடியாத நிலை இங்குஉள்ளது. காரணம் பொருளாதாரப் பிரச்னையே. ஓர் உண்மை வரலாற்றை எழுதி பெரிய பதிப்பகத்தாரிடம் போக அவர்கள் தமக்குச் சாதகம் இல்லாதவற்றை நீக்கிவிட்டு வெளியிடுகின்ற பரிதாபகரமான சம்பவங்களை இலங்கையிற் காண்கின்றோம்,

இவ்வாறு கலாகேசரி ஆ. தம்பித்துரை எழுதிய கலாயோகி ஆனந்தக் குமாரசாமி என்னும் நூலை ஆய்வுரை செய்கையில் திரு ஆ. தேவராசன் குறிப்பிட்டார்.

ஆனந்தகுமாரசாமி எழுதிய மத்தியகால சிங்களக் கலை என்னும் நூல், சிங்களக் கலை திராவிடக் கலையிலிருந்தும் கடன்பெற்றே முழுமை பெற்றது என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறது. என்று அவர் மேலும்சொன்னார்.

யாழ் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் அதிபர் இ. நாகராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நூலை வெளியிட்டுப் பேசிய இரசிகமணி கனக செந்திநாதன் சித்திரக்கலை சங்கீதக்கலை எழுத்துக்கலை, நாடகக்கலை ஆகியவற்றில் முன்னோடிகளாக இலங்கையில் இருந்தவர்கள் ஆற்றிய சேவை அளப்பரியது என்றும் அவர்களுடன் ஒப்புநோக்குகையில் இன்றிருப்போர் பணி மிகவும் குன்றியதாகவேஉள்ளது என்றும் கூறினார்.

நூலை ஆய்வுரை செய்த கவிஞர் வி. கந்தவனம்பேசுகையில் நாவலரை மக்கள் அறிந்திருக்கிற அளவுக்கு கலாயோகி ஆனந்தகுமாரசாமியை அறிந்திருக்கவில்லை. அவரது அருமை பெருமைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்துவதின் மூலந்தான் [illegible] பெறும். அத்தகைய ஒரு தொண்டை செய்த கலாகேசரி பாராட்டப்பட வேண்டியவர் என்றார்.

நன்றி தெரிவித்துப் பேசிய நூலாசிரியர் இந்நூல் எழுந்த வரலாற்றையும், அதில் குறிப்பிட்டுள்ள உண்மை வரலாற்றையும் முடிமறைக்கச் சிலர் செய்த முயற்சிகள் பற்றியும் விவரித்தார்.

யாழ். மாநகரசபை பொழுதுபோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவைக்கவிஞர் வே. ஐயாத்துரை தமிழ் வாழ்த்துப் பாடித்தொடக்கிவைத்தார்.

# குளிக்கச் சென்றவாலிபர் நீரில்மூழ்கி மரணமானார்

யாழ்ப்பாணம், செவ்.

வாழைச்சேனை கடுதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் 23 வயதான வாலிபர் ஒருவர் வழக்கம்போல் குளிக்கச் சென்று சேற்றில் சிக்கி, மீளமுடியாமல் நீரில் மூழ்கி துடிதுடித்து மரணமான சம்பவம் புனானை என்ற இடத்தில் நடந்துள்ளது.

உரும்பராயைச் சேர்ந்த இராசையா ஜெகநாதனின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரிய வந்துள்ளது.

வாழைச்சேனையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த இவ் வாலிபர் உரும்பராய் இந்துக்கல்லூரி பழைய மாணவராவார். சம்பவம் நடந்ததினம் தனியாக இவர் ஆற்றில் குளிக்கச் சென்றதாகவும் தற்செயலாக சேற்றில் சிக்கி மீளமுடியாமல் நீரில் மூழ்கி மரணமானதாகவும் மறுநாளே இவ் வாலிபரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணை நடத்திய வாழைச்சேனை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. சாராளசிங்கம் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

(உரும்பராய் நிரு)

காரைதீவு, திங்கள்

தீவுப்பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. ம. கதிரவேலுவின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட தபால் தந்தி அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் புங்குடுதீவில் தன்னியக்கத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் அமைக்க முன்வந்துள்ளார்.

## மரண அறிவித்தல்

சபாபதி- சம்பந்தர்

கல்வியங்காட்டைச் சேர்ந்தவரும், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி வித்தியாதிபரும், குருநாகல் சைவமகா சபைக் காரியதரிசியாக இருந்தவரும், பகிரங்கவேலைப் பகுதி படம் வரைஞராக இருந்து இளைப்பாறியவருமான திரு. சபாபதி சம்பந்தர் காலமாகிவிட்டார். இவர் விமலாதேவி, சேகரன் (சௌக்கியசேவைப் பகுதி பிரதம பொறியியல் வல்லுனர்), ஆகியோரது தந்தையும், திருமதி கமலா (சௌக்கியப்பகுதி வைத்திய கலாநிதி)வின் மாமனுமாவார். அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று பி. ப. 3 மணிக்கு செம்மணிமயானத்தில் நடைபெறும். 2680

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.